STATE LEGISLATURE, MADRAS
17 MAR 1967

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 5th November 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*School building*

* 421 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any accident of building collapse took place recently in an Elementary School in Kallommen Koil Street, Mackey's Garden, Madras, resulting in the collapse of the roof; and

(*b*) if so, the details thereof and the reasons therefor?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A statement[a] is laid on the table of the House.

**திரு. வை. சங்கரன் :** இந்த அறிக்கையின்படி பார்த்தால் பெற்றோர்களின் வற்புறுத்துதலுக்கு இணங்க இப்போதுள்ள கூரைக் கொட்டகைக்கு மாற்றப்பட்டது. மழை பெய்ததினால் இடிந்து விழுந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பெற்றோர்கள் வற்புறுத்தியது என்ன? காரணத்தினால் வற்புறுத்தினார்கள் என்று சொல்லமுடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது. கேஸ் பதிவு செய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குமேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

**மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள்**

*** 422 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்திலுள்ள ஜில்லா போர்டு ஹைஸ்கூல்களில் எத்தனை பில்டிங் மேட்சிங் கிராண்ட் கேட்டிருக்கின்றன ?

(இ) அவைகளில் எவ்வளவு பள்ளிகளுக்கு மேற்படி கிராண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) 70.

(இ) 56.

---

[a] Printed as Appendix I on page 402–403.